இதுகுறித்து இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு, அபுல்ஹசன் அவர்கள் ஏற்கெனவே சில நாட்களுக்கு முன்னர் தான் மயிலாடுதுறையில் இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது, இதனைத் தடைசெய்ய அரசாங்கம், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று அறிவித்தது, இருப்பினும் இதுபோன்ற ஒரு சம்பவம் சில நாட்களுக்குள்ளே மீண்டும் நடைபெற்றிருக்கிறது என்று சுட்டிக்காட்டினார். இது தொடர்பாக நான் சுட்டிக்காட்ட விரும்புவது, கள்ளச்சாராயத்தைப் பிடிப்பதற்காகத் தான் காவலர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், ஆனால், அப்படி பிடிபட்ட கள்ளச்சாராயத்திலிருந்து சிறிது கள்ளச்சாராயத்தை ஒரு Plastic Can—ல் எடுத்து வந்திருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட அசம்பாவிதம் தான் இது. எனவே, சம்பந்தப்பட்ட காவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மேலும் 3 மாதங்களுக்கு முன்பு கள்ளச்சாராயம் கடத்தி வந்த ஒரு லாரி பிடிபட்டது. காவல் நிலையத்தின் எதிரிலேயே இன்றும் அந்த லாரி நிற்கிறது. ஆனால் அதில் இருந்த கள்ளச்சாராயம் என்ன ஆயிற்று என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினவினார்கள். இது சம்பந்தமாக விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தெரிந்துகொண்டு மீண்டும் இந்த அவையில் தெரிவிக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) <u>கும்பகோணம் வட்டம் குடிதாங்கி கிராமத்தில் இறந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருடைய சடலம் ஒன்றை எடுத்துச் சென்று புதைப்பதைச் சிலர் தடுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து,</u>

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு, போளூர் வரதன் அவர்களும் திரு. ஆர். சிங்காரம் அவர்களும் கும்பகோணம் வட்டம், குடிதாங்கி என்னும் ஊரில் ஆதி திராவிடர் காலனியில் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து இங்கே குறிப்பிடுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது, அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற முறையில் திரு. ஆர். சிங்காரம்.

<u>திரு, போளூர் வரதன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, As a president .... (Interruption) நான் தான் கொடுத்திருக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

1992 மார்ச் 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு, போளூர் வரதன்,

*திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தாலுகாவிலே குடிதாங்கி என்ற கிராமத்திலே கடந்த 18-3-1992 அன்று அழகன், S/o ரங்கன் என்கின்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 70 வயதானவர் இறந்திருக்கிறார், அந்தப் பகுதியில் இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சார்ந்தவர்கள் அந்தச் சடலத்தை எடுத்துச்சென்று புதைப்பதற்கு வழிவிடாமல் தடுத்து வருகிறார்கள், தடுத்தது மட்டுமின்றி நெடுஞ்சாலை வழியாகச் செல்லக் கூடாது என்று சொன்னதால் பதட்டமான ஒரு சூழ்நிலை இன்றைக்கு அங்கே இருக்கிறது, கொள்ளிடம் கரையிலே தான் அப்படிப்பட்ட இறந்தவர்களுடைய சடலங்களைக் கொண்டு வந்து புதைப்பது வழக்கம். இது சம்பந்தமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், ஆர்.டி.ஓ. மற்றும் தாசில்தாரிடம் முறையிட்டிருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விடுப்பிலே சென்றுவிட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற ஏ.எஸ். பி.யிடம் முறையிட்டிருக்கிறார்கள். அந்த ஏ. எஸ். பி.—யும் அந்தக் குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவராக இருப்பதால் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இது சம்பந்தமாக இன்று காலையில் சட்டம்—ஒழுங்கு ஐ.ஜி. அவர்களிடம் பேசியபோது நான் குறிப்பிட்டேன். எனக்குக் கிடைத்த தகவலின்படி அந்தப் பகுதியில் இருக்கின்ற பி.எம்.கே., டி.எம்.கே. இனத்தைச் சேர்ந்தவர்கள் பிரச்சினையை உருவாக்க வேண்டுமென்பதற்காகவே ஏதோ முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அதே காரியத்தில் 1987 ஆம் வருஷம் குட்டக்குளத்தி என்கின்ற தாழ்த்தப்பட்டவர் இறந்திருக்கிறார். அவருடைய சடலத்தை எடுத்துச் செல்லுகின்ற போதும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டு, அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. ராமு அவர்களும், எஸ்.பி.—ஆக இருந்த திரு. தங்கராஜ் அவர்களும் அந்த மக்களிடத்தில் பேசிப் பார்த்திருக்கிறார்கள். எடுத்துச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது குட்டக்குளத்தியினுடைய வீட்டுக்குப் பின்னாலேயே, 1987 ஆம் ஆண்டு அந்தச் சடலம் புதைக்கப்பட்டிருக்கிறது.

அதற்குப் பின்னாலே, 6 மாதக் குழந்தை ஒன்று மீண்டும் அந்த காலனியில் இறந்திருக்கிறது. அந்தக் குழந்தையையும் எடுத்துச் செல்கின்றபோது வழியிலே தகராறு ஏற்பட்டு குழந்தை அங்கேயே வீசி எறியப்படுகிறது. காவல் துறையினுடைய தலையீட்டின் பேரிலே கும்பகோணத்திலே இருக்கின்ற இடுகாட்டுக்கு அந்தக் குழந்தையினுடைய சடலம் எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் ஏற்கனவே, 1987 ஆம் ஆண்டு அங்கே துப்பாக்கிப் பிரயோகம்

நடந்திருப்பதால், இந்தப் பிரச்சினையில் இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல. இந்திய அரசியல் அமைப்பு சட்டப்படி எந்த ஒரு இனத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் இறந்து போன அந்த உடலை எந்த அவமரியாதையும் இல்லாமல் மரியாதையோடு எடுத்துச்செல்வதற்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி இருந்தும், இன்றைக்கு அந்த குடிதாங்கி கிராமத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் கொதிப்பு அடைந்த நிலையிலே தங்களுடைய இல்லத்திலே இறந்தவரை புதைப்பதற்குக் கூட இந்த நாட்டிலே உரிமைகள் மறுக்கப்படுகின்ற விதத்திலே அங்கே இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட இனத்தவர்கள் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சடலத்தை அமைதியான முறையில் எடுத்துச் சென்று புதைப்பதற்கும், அந்தப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்களுடைய உறவினர்கள் இறந்த பின்னாலே உரிமையோடு எடுத்துச் சென்று, இடுகாட்டிலே இறுதிக் கடமைகளைச் செய்வதற்கு உரிய பாதுகாப்பையும் தமிழக அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், குடிதாங்கி கிராமத்தைச் சேர்ந்த 75 வயதான அழகன் என்ற ஆதி திராவிடர், ஆரூரில் உள்ள தமது மகளுடைய வீட்டிற்குச் சென்றவர் 18—3—1992 அன்று இறந்து விட்டார். அவரது பிரேதம் குடிதாங்கி கிராமத்திற்கு நேற்று, 19—3—1992 அன்று கொண்டு வரப்பட்டது. பின்னர் அதை அடக்கம் செய்வதற்காக அவ்வூரைச் சேர்ந்த படையாச்சி தெரு வழியாகக் கொண்டு செல்லும்போது, படையாச்சி இனத்தவர் அந்த வழியாகக் கொண்டு செல்லக் கூடாது என்று தடுத்து விட்டனர். எனவே பிரேதம் திரும்பவும் ஆதிதிராவிடர் இன குடியிருப்புக்குக் கொண்டு வரப்பட்டு, அந்த ஊரிலுள்ள பள்ளிக் கூடத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து கும்பகோணம் காவல் துறை உதவி கண்காணிப்பாளர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் ஆகியோர் நடத்திய பேச்சு வார்த்தைக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை. பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறை அலுவலர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று, இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று கொடுத்திருக்கிறேன். ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டன. அடுத்து ஒரு கவன ஈர்ப்பு இருக்கிறது. எனவே அடுத்து வரும் நாட்களில் அது எடுத்துக்கொள்ளப்படும்.

## 3. விதி 111—இன்கீழ் வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை.

### 5-2-1992 அன்று ஒரு துணை வினாவிற்கு அளித்த விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை விதி 111-ன் கீழ் அறிக்கை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5-2-1992-ம் தேதி யன்று சட்ட மன்றப் பேரவையில் வினா எண் 55 தொடர்பாக சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்களின் துணை வினாவிற்கு அவையில் பதில் அளித்ததற்குத் திருத்தம் :

அவையில் அளித்த பதில் : கோவில்பட்டி புஞ்சை தானியங்கள் ஆராய்ச்சிக்காக ஒரு வேளாண் பயிற்சி மையமும், அம்பாசமுத்திரம் நஞ்சைப் பயிர் ஆராய்ச்சி மையமும் செயல் பட்டு வந்துகொண்டிருக்கின்றன.

திருத்திய பதில் : கோவில்பட்டி புஞ்சை தானியங்கள் ஆராய்ச்சிக்காக ஒரு வேளாண் ஆராய்ச்சி மையமும், அம்பா சமுத்திரம் நஞ்சைப் பயிர் ஆராய்ச்சி மையமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## 4. கவன ஈர்ப்பு.

### வேதாரண்யம் மற்றும் கோடிக்கரை பகுதிகளிலுள்ள மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்